செ.வெ.எண்:366 நாள்: 20.5.2020

**ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான கோரிக்கைகள், முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான கோரிக்கைகள், முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிச் சான்றிதழ் வழங்கக் கோரும் முறையீடுகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கோரி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 21.04.2020 ல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக நியமித்து நான்கு உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொருள் தொடர்பாக குழுவிற்கு கோரிக்கைகள், முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் 26.5.2020க்குள் அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் அல்லது குழுவின் உறுப்பினர் செயலர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், எழிலகம் விரிவாக்கக் கட்டடம், 2-ம் தளம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு எழுத்துப் பூர்வமாக தபால், மின்னஞ்சல் (dir-combc@tn.gov.in / dbcmwo.tnpdk@nic.in) மூலமாக அளிக்கலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான ஈழுவா மற்றும் தியா சமுதாய மக்கள் உரிய காலத்திற்குள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**